RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 263 செப்டம்பர் 27, 2026 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# எஸ்ஐஆர் குறித்து ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவுகள்: தேர்தல் ஆணையம் விவரிப்பு

புதுடெல்லி: செப்.27-

பிஹார் முதல் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பணி தொடர்பான உத்தரவுகள் உள்ளிட்ட அனைத்து உத்தரவுகளும் ஒருமனதாக பிறப்பிக்கப்பட்டவையே என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கும், தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ்.சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருக்கும் இடையே கருத்து மோதல்கள் நிலவி வருவதாகவும், சிறப்புத் தீவிர திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் ஞானேஷ் குமாரின் முடிவுகளுக்கு எதிராக அவர்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி இருப்பதாகவும் செய்திகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.




சிறப்புத் தீவிர திருத்தத்தின் மூலம் பலரது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறாமல் போனதற்கு ஞானேஷ் குமாரே காரணம் என குற்றம்சாட்டும் எதிர்க்கட்சிகள், அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் கூட்டம் டெல்லியில் இன்று நடைபெற்றது. இதில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ்.சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்குப் பின்னர் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் குறித்து தெரிவித்துள்ளதோடு, அனைத்து முடிவுகளையும் ஒன்றிணைந்தே எடுப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

'நடைபெற்று வரும் எஸ்ஐஆர் பணியின்போது முரண்பாடுகள் காரணமாக வாக்காளர் யாருக்கேனும் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தால், அவர்களின் வீடுகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பிஎல்ஓ) நேரில் சென்று ஆவணங்களைப் பெற்று, பின்னர் அவற்றை வாக்காளர் பதவிவு அதிகாரியின் (ஈஆர்ஓ) முடிவுக்காக ECINet-இல் பதிவேற்றுவார்கள்.

அத்தகைய நபர்களை விசாரணைக்காக அதிகாரிகள் அழைக்கத் தேவையில்லை. ஈஆர்ஓ-வால் தீர்மானிக்கப்படும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டும் விசாரணை நடத்தப்படும். அதுவும், ஆன்லைனில் விசாரணை நடத்த முன்னுரிமை அளிக்கப்படும். வாக்காளர் தனது சார்பாக குடும்பத்தில் வயது வந்த உறுப்பினர் ஒருவரை விசாரணையில் கலந்து கொள்ள அங்கீகரிக்கலாம்.

எஸ்ஐஆர் படிவம் 6 உடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழிப் படிவத்தை வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த நடவடிக்கையின்போது மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டும். எஸ்ஐஆர் அல்லாத மற்ற காலங்களில் முந்தைய விதிகளின்படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும்.

மகாராஷ்டிரா மற்றும் டெல்லியில் எஸ்ஐஆர் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கான காலக்கெடு முறையே அக்.12 மற்றும் அக். 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஆணையத்தின் அனைத்துக் கூட்டங்களுக்கும் நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே விநியோகிக்கப்படும். கூட்ட நடவடிக்கைகள் குறித்த குறிப்புகள் வெளியிடப்படும்.

சமீபத்திய மாதங்களில் நாடு முழுவதும் எஸ்ஐஆர் உட்பட பல முடிவுகளை ஆணையம் எடுத்துள்ளது. பிஹாரில் தொடங்கி 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட எஸ்ஐஆர் தொடர்பான உத்தரவுகள் ஆணையத்தின் ஒருமனதான ஒப்புதலுடன் பிறக்கப்பட்டன. இது கடந்த மே 27-ம் தேதி வெளியிடப்பட்ட உச்ச நீதிமன்ற உத்தரவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற ஆணையத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இந்த பத்திரிகைச் செய்தி வெளியிடப்படுகிறது. இதற்கு முழு ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "அரசியல் எதிர்காலம் வேண்டுமென நினைப்பவர்கள் தி.மு.க., அ.தி.மு.க.,வில் பயணிக்க மாட்டார்கள்" - அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை, செப்.27-

"அரசியலில் பெரிய எதிர்காலம் வேண்டும் என நினைக்கிறவர்கள் யாரும் ஸ்டாலின், உதயநிதி, எடப்பாடியை நம்பிப் பயணிக்கமாட்டார்கள்'' என்று அமைச்சர் நிர்மல் குமார் கூறியுள்ளார்.



மதுரையில் வரும் 28-ம் தேதி முதல்வர் வருகையை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் நிர்மல் குமார் காந்தி மியூசியத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: புதுப்பிக்கப்பட்ட காந்தி மியூசியம் திறப்பு விழா, தாய்மாமன் தங்க மோதிர திட்ட தொடக்க விழா வரும் 28-ஆம் தேதி மதுரையில் நடைபெறவுள்ளது.

இந்த இரு நிகழ்வுகளிலும் பங்கேற்க முதல்வர் விஜய் வருகிறார். தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தை மதுரையிலிருந்து தொடங்கி வைப்பது அனைவருக்கும் ஒரு பெருமையான விஷயம்.

முதல்வர் இந்த இரு நிகழ்ச்சிகளில் பங்கேற்பது குறித்து மட்டுமே முதல்வர் அலுவலகத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனாட்சியம்மன் கோயிலுக்குச் செல்வாரா என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை. முதல்வர் வருகைக்கான நேரம் உள்ளிட்டவை குறித்து முறையாக அறிவிக்கப்படும்.

திமுக ஆட்சியில் வீரமணி வழக்கு போன்று பல வழக்குகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. முன்னாள் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கூறும்போது, 'வீடியோ தெளிவில்லாமல் இருந்தது' என கூறியுள்ளார். திமுகவினர் இந்த வழக்கை மிகச் சாதாரணமாகக் கடந்து சென்றுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக வீரமணியை மிரட்டி, பலரும் பணம் வாங்கியதாக செய்திகள் வருகின்றன. இது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது. திமுக ஆட்சியில் போக்சோ வழக்கை கிடப்பில் போடுவதற்கான காரணம் என்ன? போதுமான ஆதாரம் இல்லை என்று கிடப்பில் போட்டீர்களா? இல்லை பேரம் முடிந்து போனதால் கிடப்பில் போட்டீர்களா என்பதுதான் எங்கள் கேள்வி.

திமுக ஆட்சியில் பழனிவேல் தியாகராஜன் நிதித்துறை அமைச்சராக இருந்தபோது, அவர் அந்தப் பதவிக்கு சரியா வரமாட்டார் என்றுதான் விலக்கி வைக்கப்பட்டார். இன்னும் அவர் எத்தனை நாளைக்குதான் அப்பா, தாத்தான்னு குடும்பப் பெருமைகளை பேசி அரசியல் செய்வார் என்று தெரியவில்லை.

அவரை இப்போது வரைக்கும் அறிவாலயத்துக்குள் விடவில்லை. அவரின் தகுதி பற்றி திமுகவினருக்கு தெரியும். அவர் சொந்த தொகுதிக்குள் போகாததால் மக்கள் அவருக்கு வாக்களிக்காமல் வெளியே அனுப்பி விட்டனர். தவெகவில் யாரும் பவர் சென்டர் இல்லை. மக்களுக்கு என்ன தேவையோ அதைத்தான் செய்து வருகிறோம். நாங்கள் எந்த அறங்காவலர்களையும் தொந்தரவு செய்யவில்லை.

பழனிவேல் தியாகராஜன் தனது, சொந்த அறக்கட்டளையில் உள்ளவர்களை எந்த வேலையும் செய்யவிடாமல் முடக்கியவர். மொத்தத்தில் அரசியலில் பெரிய எதிர்காலம் வேண்டும் என நினைக்கிறவர்கள் யாரும் ஸ்டாலின், உதயநிதி, எடப்பாடியை நம்பிப் பயணிக்கமாட்டார்கள். சும்மா பொழுதுபோக்குக்கு லெட்டர் பேடு வைத்துக்கொண்டு ஊர் சுற்றிவர வேண்டும் என நினைப்பவர்கள்தான் அவர்களுடன் இனி பயணிப்பார்கள்.

நாங்கள் எங்கள் கொள்கை எதிரியாக பாஜகவை நினைக்கிறோம் என்பதில் உறுதியாக உள்ளோம். கடந்த சட்டப்பேரவைத் தேர்தல்களில் திமுக, அதிமுக கட்சிகள் பெற்ற வாக்குகள், அவர்களுடைய கூட்டணிக் கட்சிகளுடைய வாக்குகள். இந்த தேர்தலில் அவர்கள் எவ்வளவு வாக்குகள் வாங்குகிறார்கள் என்று பார்ப்போம், '' என்றார்.

# "மின் வாரிய அலுவலகத்தில் முதல்வர் செய்தது ரிவ்யூ அல்ல... ரீல்ஸ்!" - ஸ்டாலின் விமர்சனம்

சென்னை: செப்.27-

"மின் வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் ரிவ்யூ செய்யவில்லை; ரீல்ஸ் தான் எடுத்திருக்கிறார்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.



தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மின்வெட்டு புகார்கள் எழுந்து வரும் நிலையில், தவெக அரசின் அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளிலேயே அடுத்தடுத்து மின்வெட்டு ஏற்படும் அவலநிலை ஏற்பட்டுள்ளது தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில், "தவெக ஆட்சியில் அமைச்சர் பெருமக்களுக்கே இந்த நிலை என்றால், சாமானிய மக்களின் கதி என்ன என்பதைச் சொல்லவே தேவையில்லை. இரண்டு நாட்களுக்கு முன், மின் வாரியத் தலைமையகத்தில் முதல்வர் ரிவ்யூ செய்யவில்லை. ரீல்ஸ்தான் எடுத்துவிட்டு வந்திருக்கிறார் போல" என்று பதிவிட்டுள்ளார்.

# "30 நிமிடத்தில் 32 முறை உச்சரிப்பு... திமுக மீது விஜய்க்கு பயம்" - தாராபுரத்தில் உதயநிதி பேச்சு

சென்னை: செப்.27-

"நீங்கள் மறுபடியும் தவெக வேட்பாளரை ஜெயிக்க வைத்தீர்கள் என்றால், சட்டப்பேரவைக்கு சென்று முதல்வரை புகழ்ந்து பாட்டுதான் பாடுவார். இல்லையெனில் ரீல்ஸ் போடுவார்கள். அதிமுக வேட்பாளருக்கு ஓட்டுப் போட்டீர்கள் என்றால், மீண்டும் பெட்டி வாங்கிக் கொண்டு, கட்சி மாறிவிடுவார்கள்" என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

மேலும், "மதுராந்தகம் தேர்தல் பிரச்சாரத்தில் 30 நிமிடம் பேசிய முதல்வர் விஜய், 32 முறை 'திமுக' என உச்சரித்தார். அந்தளவுக்கு திமுக மீது பயம்" என்று கூறினார்.

தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இன்று பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசிகையில்,"திமுக ஆதரவுடன் வென்ற கட்சிகளின் ஆதரவுடன்தான் தவெக ஆட்சி நடக்கிறது.



திமுக கூட்டணியில் வெற்றி பெற்ற சிலர் எதுவுமே சொல்லாமல் திருட்டுத்தனமாக சென்றுவிட்டார்கள்; கூட்டணிக் கட்சியினர் சிலர் மு.க.ஸ்டாலினிடம் சொல்லிவிட்டு சென்றனர். சிலர் முதுகில் குத்திவிட்டுச் சென்றனர். எல்லா கட்சித் தலைவர் வீட்டுக்கும் முதல்வரே சென்று சோஃபா டெலிவரி செய்தார்.

தலைவர்கள் அனைவருக்கும் சோஃபா. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் பெட்டி. தவெக ஆட்சி வந்ததில் இருந்து திமுக எம்எல்ஏக்களைப் பார்த்தால் வழக்குப் போடுகின்றனர். அதிமுக எம்எல்ஏக்களைப் பார்த்தால் பெட்டி கொடுக்கின்றனர்.

சட்டப்பேரவையில் சபாநாயகர் ஆக்ஷன் சொன்னால் விஜய் நடிக்க ஆரம்பித்து விடுகிறார். நீங்கள் மறுபடியும் பாமாவை ஜெயிக்க வைத்தீர்கள் என்றால், சட்டப்பேரவைக்கு சென்று பாட்டுதான் பாடுவார்கள். இல்லையெனில் ரீல்ஸ் போடுவார்கள். அதிமுக வேட்பாளருக்கு ஓட்டுப் போட்டீர்கள் என்றால், மீண்டும் பெட்டி வாங்கிக் கொண்டு, கட்சி மாறிவிடுவார்கள்.

மதுராந்தகம் தேர்தல் பிரச்சாரத்தில் 30 நிமிடம் பேசிய முதல்வர் விஜய், 32 முறை திமுக.. திமுக.. திமுக.. என கத்துகிறார். நாம் கூட திமுக-வைப் பற்றி அவ்வளவு பேசியிருக்க மாட்டோம். அந்தளவுக்கு முதல்வருக்கு திமுக மீது பயம்.

அதிமுக எம்.எல்.ஏ.க்கள் 7 பேரை பெட்டி கொடுத்து தூக்கியுள்ளது தவெக. எம்.எல்.ஏ.வாக பொறுப்பேற்ற 10 நாட்களில் ராஜினாமா செய்து, குதிரை பேரம் மூலமாக கட்சி மாறியுள்ளனர். கடந்த முறை எந்தச் சின்னத்தில் வாக்களித்தீர்களோ அதே நபர்களை மீண்டும் வேட்பாளராக நிறுத்தி மக்கள் வாக்களிப்பார்கள் என நம்புகிறது தவெக. அவர்களுக்கே மீண்டும் வாக்களித்தீர்களென்றால் உங்களுக்காக அவர்கள் குரல் கொடுக்க மாட்டார்கள்.

தவெக கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. ரெண்டு பேருக்குதான் போட்டி... ஒன்று மின்வெட்டு, மற்றொன்று அரிவாள் வெட்டு.

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் எஸ்.சுகன்யா நன்கு படித்தவர். சட்டமன்றத்தில் இந்தப்பகுதி மக்களுக்காக குரல்கொடுக்கக் கூடியவர். அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்ய வேண்டும்" என்று அவர் பேசினார்.

# அந்நிய நேரடி முதலீடுகளை அதிகம் ஈர்த்த மாநிலங்கள் – முதலிடம் பிடித்தது தமிழகம்

புதுடில்லி: செப்.27-

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், அந்நிய நேரடி முதலீடுகளை அதிகம் ஈர்த்த மாநிலங்கள் பட்டியலில், ரூ.57,011 கோடி முதலீடுகளை ஈர்த்து தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

நடப்பு 2026-27ம் நிதி ஆண்டின் முதல் காலாண்டில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த பட்டியலில், இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. ரூ.57,011 கோடி முதலீட்டை தமிழகம் ஈர்த்து இருக்கிறது; கடந்த 2025-26ம் முதல் நிதியாண்டில் ரூ.25,870 கோடியாக அந்நிய நேரடி முதலீடு இருந்தது. தற்போது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு அதிகமாகும்.



இதனால் அந்நிய நேரடி முதலீட்டு வரவுகளில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 30 சதவீதத்தை தமிழகம் பெற்றுள்ளது. நிதி, வங்கி, காப்பீடு, வணிகம் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய சேவைத் துறையில் முதலீடுகள் அதிகரித்துள்ளது.

ஜப்பானின் முன்னணி நிறுவனமான MUFG இடமிருந்து, தமிழகத்தின் ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்திற்கு வந்த பெரும் முதலீடே இந்த உயர்வுக்கு முக்கிய காரணமாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவின் மொத்த முதலீட்டில் கர்நாடகாவின் பங்கு 2025-26 நிதியாண்டின் முதல் காலாண்டில் 31 சதவீதமாக இருந்த நிலையில், நடப்பு 2026-27 நிதியாண்டின் முதல் காலாண்டில் 11 சதவீதமாகக் குறைந்தது. மகாராஷ்டிராவிலும் 29 சதவீதத்திலிருந்து 21 சதவீதமாகக் குறைந்துள்ளது.

மஹாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்கள் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. குஜராத் மாநிலத்தில் சற்று அதிகரித்துள்ளது. அதேபோல், தற்போதைய காலாண்டில் (ஜூலை-செப்டம்பர்), அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி மருந்து நிறுவனமான 'வால்கிரீன்ஸ்' மற்றும் காபி நிறுவனமான 'ஸ்டார்பக்ஸ்' உள்ளிட்ட இரண்டு முக்கிய முதலீடுகளை தமிழகம் ஈர்த்துள்ளது.

# குன்னூர் நகராட்சியில் பொது மக்களின் அடிப்படை வசதிகளை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளாத குன்னூர் நகராட்சி ஆணையாளர் பொது மக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேற்றாவிட்டால் போராட்டம்

## நகர்மன்ற துணைத் தலைவர் எச்சரிக்கை



நீலகிரி, செப்.27-

குன்னூர் நகர மன்ற மாதாந்திர கூட்டம் நகர்மன்ற தலைவர் சுசிலா தலைமை யிலும், ஆணையர் கிருஷ்ணா ராம் நடைபெற்றது. முன்னதாகதுணைத் தலைவர் வாசிம்ராஜா அனைவரையுவரவேற்றுப் பேசினார். இதனை தொடர்ந்து நடைபெற்ற விவாதங்கள் நடைபெற்றது நகர்மன்ற உறுப்பி ஜாகிர் உசேன் திமுக. பேசுகையில் குன்னூர் நகர பகுதியில் ஏற்கனவே வாகன நெரிசல் அதிகரித்து வரும் நிலையில், ஆண்டுதோறும் நகராட்சிக்கு ரூ.11 லட்சம் வரை வருமானம் கிடைக்கும் பார்க்கிங் தளத்தில் தற்காலிக கடைகள் அமைக்கும் பணி நடந்து வருவதால் நகர பகுதிக்கு வரும் பெரும்பாலான மக்கள் சாலையோரங்களில் நிறுத்தி வருகின்றனர். இதில் அவ்வப்போது காவல்துறையினரும் அபராதம் விதித்து வருவதால் மார்க்கெட் வியாபாரிகள் வெகுவாக பாதித்து வருகின்றனர். எனவே. நகராட்சிக்கு வருவாய் கிடைக்கும் வகையில் தற்காலிக கடைகள் பணியை நிறுத்திவிட்டு மீண்டும் மறு டெண்டர் மூலம் பார்க்கிங் வசதி ஏற்படுத்த நகராட்சி நிர்வாகம் முன் வர வேண்டும்.தற்காலிக கடைகள் அமைப்பது தொடர்பாக மன்றத் துணை இயக்குனர் மற்றும்நகர மன்ற துணைத் தலைவர் ஆணையர் உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள் ஆய்வு மேற்கொண்டு உரிய ஆலோசனை வழங்கினோம் இந்நிலையில் மார்க்கெட் பகுதியில் உள்ள 386 கடைகளை ஒரே கட்டமாக இடித்த அதன் பின்னர்தான் புதிய கடைகள் கட்டப்படும் என ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ளார் இதனால் வியாபாரிகள் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறி உள்ளது.இந்த நகராட்சியைமேம்படுத்த ஆணையர் பொருத்தமானவர் இல்லை. இது தொடர்பாக அவர் மீது கண்டன தீர்மானமும் நான் கொண்டு வருகிறேன்.

நகர் மன்ற. உறுப்பினர் சையது மன்சூர் திமுக பேசுகையில் நகர மக்களின் குறைகள் குறித்து எடுத்துக் கூற நேரடியா சந்திக்க பலமுறை ஆணையாளர் கண்டு கொள்வதில்லை. ஆனால் ஆளும் கட்சியினர் அழைத்தால் உடனடியாக உடனடியாக செல்வது ஏன்,மேலும் நகராட்சி குடியிருப்புகளில் வசித்து வரும் நபர்களுக்கு வாடகை உயர்வை ரத்து செய்ய வேண்டும்.

வாசிம் ராஜா:- (துணைத் தலைவர்) குன்னூர் நகராட்சியின் மேம்பாட்டிற்காக நகராட்சி ஆணையர் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை எவ்வகை நடவடிக் கையும் மேற்கொள்ள வில்லை கிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள ஓடையில் முட்புதர்கள் அதிகரித்துள்ளதால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதால் உடனடியாக இதனை தூர்வார வேண்டுமென ஆணையர் மற்றும் அதிகாரிகளிடம் பலமுறை வலியுறுத் தியும் எவ்வித பலனும் இல்லை.எனது வார்டு பிரச்சினைக்கு நான் போராட வேண்டியுள்ளது. இந்த ஆணையர் பொறுப்பு ஏற்றத்தில் இருந்து இன்று வரை நகரம் மேம்பாட்டுக்காக எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாததால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்நிலையில் நீடிக்கும் பட்சத்தில் நகராட்சி ஆணையரை கண்டித்து அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் ஒன்றி ணைந்து போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என எச்சரித்தார். இதனைத் தொடர்ந்து திமுக அதிமுக உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை நகராட்சி ஆணையருக்கு எதிராக கூறினர்.இதில் ஒரு கட்டத்தில் அதிமுக உறுப்பினர்கள் ராஜ்குமார் மற்றும் உமாராணி ஆகியோர் கூட்ட அரங்கில் தர்ணாவில் ஈடுபட்டினர் இதேபோல் திமுக உறுப்பினர் ஜெகநாதன் நகர மன்ற கூட்டமே முற்றிலும் வேஸ்ட் எனக்கூறி வெளியிடப்பு செய்தார்.இதுபோல் நேற்று நடந்த நகரமன்ற கூட்டத்தில் பல்வேறு வாக்கு- வாதங்களால் பரபரப்பு ஏற்பட்டது.

குன்னூர் நகர மன்ற கூட்டத்தில் அனைத்து நகர மன்ற உறுப்பினர்கள் தங்களது வார்டுகளின் பிரச்சனைகள் குறித்து தொடர்ந்து ஆணையரிடம் எடுத்துக் கூறியதுடன், ஒரு கட்டத்தில் தீவிர வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர். ஆனால் இதற் கெல்லாம் ஆணையர் நாளை பார்ப்போம், பார்த்துக் கொள்ளலாம், செய்துவிடலாம் என மட்டுமே என கூறி கூட்டத்தை முடித்து வைத்தது குறிப்பிடத்தக்கது.



■ கிருஷ்ணகிரி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2026 -சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (25.09.2026) முதல் விற்பனையை துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன், கோ-ஆப்டெக்ஸ் மேலாளர் (வடிவமைப்பு (ம) உற்பத்தி) துரைமுருகன், இரக மேலாளர் மாரியப்பன், கிருஷ்ணகிரி விற்பனை நிலைய மேலாளர் சிலம்பரசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஸ்ரீசீனிவாச பெருமாள் ஆலய புனருத்தாரன நூதரசிலாரூப பிரதிஷ்டா அஷ்டபந்தன மஹா சம்ப்ரோக்ஷண மஹா கும்பாபிஷேக பெருவிழா





சென்னை, செப்.27-

சென்னை, ஆவடி கோணாம்பேடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சீனிவாச பெருமாள் ஆலய புனருத்தாரன நூதரசிலாரூப பிரதிஷ்டா அஷ்டபந்தன மஹா சம்ப்ரோக்ஷண மஹா கும்பாபிஷேக பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. சீர்மிகு தெய்வீக தமிழ் திருநாட்டில் பக்தர்களை ரக்ஷிப்பதர்க்காக பரந்தாமன் அர்ச்சாவதார மூர்த்தியாக ஆங்காங்கே அருள் பாலித்து வருகின்றார். அவ்வண்ணம் கோணாம்பேடு கிராமத்தில் ஸ்ரீ பெருமாளாக ஆலயத்தில் புதிய விமான கலசங்கள் மற்றும் புதிய பிம்பங்கள் பிரதிஷ்டை நடைபெற்று மராமத்து பணிகள் பூர்த்தி பெற்ற நிலையில் மங்கள ஸ்ரீ பராபவ வருடம் புரட்டாசி மாதம் 8ஆம் தேதி வெள்ளிக்கிழமை சுக்ல சதுர்தசி சதய நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் துலா லக்னத்தில் ஸ்ரீ சீனிவாச பெருமாள் சுவாமி நூதன விமானம் மற்றும் மூலவர் ஸ்ரீ சீனிவாச பெருமாள் சுவாமி பிராசின மூர்த்த பிம்ப மூர்த்தங்களுக்கு மஹா சம்ப்ரோக்ஷனம் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணை தலைவர் கே என் சேகர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆனந்த கிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தனர், ஆலய கும்பாபிஷேக திருப்பணிகளை சிறப்பாக ஆலய நிர்வாகிகள் ஹரி, சிவக்குமார், கங்காதுரை, நடராஜன், மோகன்ராஜ்,முரளி, உதயபிரகாஷ், சத்தியராஜ், ஆறுமுகம், பாண்டியன், ராஜு, சரவணன்,ரகு, லோகேஷ்,மதன், கார்த்திக் மற்றும் கிராம பொதுமக்கள் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மேலும் நன்கொடையாளர் எம் எஸ் கன்ஸ்ட்ரக்சன் மோகன்ராஜ் கலந்து கொண்டார், வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் சமபந்தி விருந்து நடைபெற்றது.

# எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம்

தேனி, செப்.27-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

எரிவாயு நுகர்வோர்களுக்கு சிலிண்டர் வழங்குவதில் காணப்படும் காலதாமதம் மற்றும் எரிவாயு நுகர்வோர் குறைபாடுகளைகளையும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தேனிமாவட்டத்திற்குட்பட்ட அனைத்து எண்ணெய் நிறுவன எரிவாயு முகவர்கள், எண்ணெய் நிறுவன மேலாளர்கள் மற்றும் எரிவாயு நுகர்வோர்கள் ஆகியோர்கள் கலந்துகொள்ளும் எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 28.09.2026 - ஆம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடத்தப்பட உள்ளது.





இக்கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் நுகர்வோர் குறைகளைப் பதிவுசெய்து, நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு முகவர்களின் கவனக்குறைவு போன்ற குறைபாடுகள் தொடர்பான புகார்களைக் பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர்கள் தங்களது புகார்கள் குறித்து தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என்பதால் அனைத்து நுகர்வோர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.





# பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பெரியகுளம் சார் ஆட்சியர் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டு

தேனி, செப்.27-

உலக சுற்றுலா தினம் 2026 முன்னிட்டு, தேனி மாவட்டம் தேனி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பெரியகுளம் சார் ஆட்சியர். தவலேந்து, பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27-ஆம் தேதியன்று உலக சுற்றுலா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரையின்படி, "டிஜிட்டல் செயல்திட்டம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் சுற்றுலாவை மறு வடிவமைத்தல்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு,தேனி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக சுற்றுலா தினம் 2026 சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுமேலும், கல்லூரி மாணவியர்களிடையே நடைபெற்ற கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும், இவ்விழாவில் சுமார் 250க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுற்றுலா அலுவலர் .பாஸ்கரன், கல்லூரி செயலாளர். ராதாகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா, பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி மாணவிகள் சாதனை

ஜோலார்பேட்டை, செப்.27-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மினி விளையாட்டு மைதானத்தில் 17/09/2026 அன்று முதல்வர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியில் 15 கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இதில் மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி மாணவிகள் நீச்சல், செஸ், சிலம்பம், ஹேண்ட்பால், கிரிக்கெட், ஹாக்கி, ஃபுட்பால், வாலிபால், பேட்மிண்டன், பேஸ்கெட் பால், கபடி, டேபிள் டென்னிஸ், தடகள போட்டி, யோகா, சதுரங்கம் போன்ற பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு ரூ.6,82,000/- பரிசு பெற்றுள்ளனர். ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் K.C.வீரமணி MLA, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் நல்லசிவன் IAS, மாவட்ட விளையாட்டு அலுவலர் R.ஜெயகுமாரி, விளையாட்டு துணை பொது மேலாளர் நொயிலின் ஜான், முதல்வர் கோப்பை கல்லூரி ஒருங்கிணைப்பாளர் Dr.மகாலட்சுமி ஆகியோர் பரிசு தொகைக்கான காசோலையை வழங்கி கௌரவித்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவிகளை கல்லூரித் இனை தலைவர் C.லிக்மி சந்த் ஜெயின், தலைவர் V.திலீப் குமார் ஜெயின், செயலாளர் ஆனந்த் சிங்வி, முதல்வர் Dr.M.இன்பவள்ளி கல்வி ஆலோசகர் Dr.T.பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்திப் பாராட்டினர்.

# குரோம்பேட்டையில் உலக மருந்தாளுநர் தினம் கோலாகலம் மாணவர் பேரணி, மரக்கன்று நடுதல் மூலம் விழிப்புணர்வு





குரோம்பேட்டை, செப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் செயல்படும் மருந்தியல் பீடம் சார்பில், உலக மருந்தாளுநர் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

"ஆரோக்கியமான எதிர்காலத்திற்காக மருந்தாளுநர்களை வலுப்படுத்துதல்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவத் துறையினர் உற்சாகமாக பங்கேற்றனர்.

விழாவை முன்னிட்டு காலை நடைபெற்ற மாணவர் விழிப்புணர்வு பேரணியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு, மருந்தாளுநர்களின் சேவை மற்றும் சமூகப் பங்களிப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதனைத் தொடர்ந்து வளாகத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து சிறப்பு உரைகள், புரிந்துணர்வு ஒப்பந்த கையெழுத்து நிகழ்வு மற்றும் மாணவர்களுக்கான ஊக்கமளிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், பார்மா வினாடி-வினா போட்டி, டிஜிட்டல் ரீல் தயாரிப்பு போட்டி, ரங்கோலி போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டன.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, டேப்லெட்ஸ் இந்தியா நிறுவனத்தின் மனிதவள பொது மேலாளர் டாக்டர் எஸ். விஸ்வமாணிக்கம், மருந்துத் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் மனிதவள மேம்பாடு குறித்த சிறப்பு சொற்பொழிவை வழங்கினார். இந்த உரை மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய மருந்தியல் பீட டீன் டாக்டர் என். தீபா, மருந்தாளுநர் துறையில் முறையான கல்வி மற்றும் அங்கீகாரம் பெற்றவர்களே பணியாற்ற வேண்டும் என்றும், உரிய தகுதி இல்லாமல் மருந்தகங்களில் பணியாற்றுபவர்கள் நோயாளிகளுக்கு சரியான மருந்துகளை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிவித்தார். இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் என அவர் கூறினார்.

உலக மருந்தாளுநர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழா, மருந்தாளுநர்களின் சமூகப் பங்களிப்பை எடுத்துரைப்பதோடு, மாணவர்களிடையே தொழில்முறை ஆர்வம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வளர்த்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தில் இந்தியன் வங்கி (முன்னணி வங்கி) சார்பில் 2026-27 ம் ஆண்டிற்கான ரூ.54,438.98 கோடி மதிப்பிலான முன்னுரிமை சார்ந்த மற்றும் முன்னுரிமை சாராத கடன் திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் 25.09.2026 நேற்று வெளியிட்டார். உடன், உதவி ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சுசிலாராணி, இந்திய ரிசர்வ் வங்கி உதவி பொதுமேலாளர் நடராஜன், இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார், நபார்டு வங்கி மேலாளர் ரமேஷ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வெங்கடேசன், தாட்கோ மாவட்ட மேலாளர் ரேகா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டம் கூடலூரில் பொதுவிநியோகத் திட்ட கண்காணிப்புக் குழு கூட்டம்

நீலகிரி, செப்.27-

நீலகிரி மாவட்ட கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பொது விநியோகத் திட்ட கண்காணிப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன் தலைமை தாங்கினார்.

வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி, கூடலூர் குடிமை பொருள் தனி வட்டாட்சியர் நடேசன், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் சிக்கனுமான், காளிமுத்து, மகேந்திரபூபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியின் பயன்பாடு மற்றும் அதன் ஊட்டச்சத்து பயன்கள் குறித்து பழங்குடியினர் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்கு விளக்க வேண்டும்

மேலும், ராகி, கோதுமை, அரிசி உள்ளிட்ட பொருட்களை பொதுமக்களின் விருப்பம் மற்றும் தேவைக்கேற்ப வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ரேஷன் கடைகளில் தற்போது வழங்கப்படும் பாமாயிலுக்கு மாற்றாக தேங்காய் எண்ணெய் வழங்குவது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும், பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிகரித்து வழங்க வேண்டும். ரேஷன் கடைகளில் சாக்குகள் மற்றும் பொருட்களை முறையின்றி போட்டு வைப்பதை தவிர்த்து, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கடைகளை சுத்தமாகவும் முறையாகவும் பராமரிக்க வேண்டும்.

மேலும், குடோன்களில் இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் குறைவின்றி சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், பொருட்களின் எடை மற்றும் விநியோகத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

புதிய குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்து நீண்ட காலமாக காத்திருக்கும் பொதுமக்களுக்கு, குறிப்பாக மலைப்பகுதி மற்றும் பழங்குடியின மக்களுக்கு, விரைந்து கள ஆய்வு மேற்கொண்டு தகுதியானவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன் பேசும்போது, கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் தரமாகவும், சரியான எடையிலும், உரிய காலத்திலும் கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். செறிவூட்டப்பட்ட அரிசி தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பழங்குடியின மக்களிடையே கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும், ராகி, கோதுமை உள்ளிட்ட பொருட்களை மக்களின் தேவைக்கேற்ப வழங்குவது தொடர்பான கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்தார்.

பாமாயிலுக்கு மாற்றாக தேங்காய் எண்ணெய் வழங்குவது, மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை அதிகரிப்பது போன்ற கோரிக்கைகள் மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

குடோன்களில் இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள் சரியான எடையில் சென்றடைவதை கண்காணிக்கவும், ரேஷன் கடைகளில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பொருட்களை முறையாக பராமரிக்கவும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும், புதிய குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்துள்ளவர்களின் மனுக்கள் தொடர்பாக விரைந்து கள ஆய்வு மேற்கொண்டு, தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வருவாய் கோட்டாட்சியர் உறுதியளித்தார்.

# ஞானேஷ் குமார் விவகாரத்தில் ஒன்றிணையும் எதிர்கட்சிகள்: அடுத்த வாரம் இண்டியா கூட்டணி கூட்டம்

புதுடெல்லி, செப்.27-

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் விவகாரத்தில் எதிர்கட்சிகள் ஒன்றிணையத் துவங்கி உள்ளன. இது தொடர்பாக அடுத்த வாரம் இண்டியா கூட்டணியின் கூட்டம் நடைபெறவுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை விமர்சித்து வந்த எதிர்க்கட்சிகள், இப்போது அவருக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளன. இதனால், ஞானேஷ் குமார் விவகாரம் தொடர்பான சர்ச்சை மேலும் தீவிரம் அடைகிறது. இந்த விவகாரத்தில் எதிர்கட்சிகள் அனைத்தும் மீண்டும் ஒன்றிணையத் துவங்கி உள்ளன. இது தொடர்பாக அடுத்த வாரம் எதிர்க்கட்சிகளின் முக்கியக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மம்தா முதல் இடதுசாரிகள் வரை அனைவரும் ஒன்றிணைந்து கலந்துகொள்ள உள்ளனர். தேர்தல் ஆணைய



விவகாரம் குறித்து மம்தா பானர்ஜி மற்றும் அபிஷேக் பானர்ஜி ஆகியோர் ராகுல் காந்தியுடன் பேசியுள்ளனர். மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபியும் மம்தா பானர்ஜியுடன் இதுகுறித்துப் பேசியுள்ளார்.

ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணியின் மூத்த தலைவர்கள் இது குறித்துத் தொடர்பில் உள்ளனர்.

குறிப்பாக, தமிழகத்தில் விஜய் ஆட்சிக்கான ஆதரவால் இண்டியா கூட்டணியில் இருந்து வெளியேறிய திமுகவும் தொடர்பில் வந்திருக்கிறது. இதையடுத்து, மீண்டும் இண்டியா கூட்டணியில் திமுக சேருமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஞானேஷ் குமார் மீது புகார்களை முன்வைக்க, அடுத்த வாரம் கூட்டணிக் கூட்டம் மற்றும் கூட்டுச் செய்தியாளர் சந்திப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஞானேஷ் குமாருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

வரும் செவ்வாய்க்கிழமையன்று காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடர்பாகத் தேர்தல் ஆணையத்துக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்தும், ஞானேஷ் குமாருக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்துவதற்கான உத்திகள் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படுகின்றன.

# 3 மாதங்களில் 377 புகார்கள் - டெல்லி குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் தகவல்

புதுடெல்லி, செப்.27-

டெல்லியில் குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தில் 3 மாதங்களில் 377 புகார்கள் பதிவாகி உள்ளன. இவற்றில் போக்ஸோவில் 38 மற்றும் 17 குழந்தைகள் காணாமல் போனதாகவும் வழக்குகள் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான டெல்லி ஆணையம் (டிசிபிசிஆர்) கடந்த 3 மாதங்களில் பதிவான வழக்குகளை வெளியிட்டுள்ளது. இந்த தரவுகளின்படி, ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில் மொத்தம் 377 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

இதில் போக்சோ சட்டத்தின் கீழ் 38 வழக்குகளும் அடங்கும். இது குறித்து டிசிபிசிஆர் தலைவர் ஓம் பிரகாஷ் வியாஸ் கூறுகையில், ‘கல்வி உரிமைச் சட்டம் தொடர்பான புகார்களே அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன. மொத்த புகார்களில், 206 புகார்கள் கல்வி உரிமைச் சட்டம் சார்ந்தவை.

அடுத்த நிலையில், சிறார் நீதி தொடர்பாக 87 புகார்களும், 38 போக்சோ வழக்குகளும்,



காணாமல் போன குழந்தைகள் தொடர்பாக 17 வழக்குகளும் பதிவாகி உள்ளன.

இத்துடன், குழந்தைத் தொழிலாளர் தொடர்பான 16 வழக்குகளும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான 13 புகார்களும் பதிவாகியுள்ளன. 56 வழக்குகளை ஆணையம் தாமாகவே முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது.’ எனத் தெரிவித்தார்.

டெல்லியின் ஆஸ்தா குஞ்ச் பூங்காவில் 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட புகார் தொடர்பாக காவல் துணை ஆணையருக்கு டிசிபிசிஆர் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில், இரண்டு வாரங்களுக்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேபோல், ஆணையத்தின் முன்னெடுப்புகள் குறித்து டிசிபிசிஆர் தலைவர் வியாஸ் கூறுகையில், “டெல்லி முழுவதும் உள்ள பள்ளிகளில் கட்டாய மற்றும் வழக்கமான தற்காப்புக் கலைப் பயிற்சிகளை நடத்த வலியுறுத்தி உள்ளோம். இது தொடர்பாக துணைநிலை ஆளுநர், முதல்வர், டெல்லி முனிசிபல் கார்பரேஷனின் மேயர் அல்லது ஆணையர் ஆகியோருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களிடையே போக்சோ குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஆணையம் நடத்தி வருகிறது. இப்பிரச்சாரம் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுதல், குற்றங்களைப் புகாரளித்தல் மற்றும் மனநல ஆலோசனை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

பல்வேறு துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம், குழந்தைகளை மீட்பது மற்றும் குழந்தை பிச்சைக்காரர்கள் இல்லாத டெல்லியை மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.” எனத் தெரிவித்தார்.

## புரட்டாசி இரண்டாவது சனிக்கிழமை:

# சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த சென்ராய பெருமாள் சுவாமி!

கிருஷ்ணகிரி, செப்.27-

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்துள்ள சென்ராய பெருமாள் சுவாமி கோவிலில் புரட்டாசி மாத இரண்டாவது சனிக்கிழமையை முன்னிட்டு சுவாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



புரட்டாசி மாதம் பெருமாளுக்கு உகந்த மாதமாகக் கருதப்படுவதால், இரண்டாவது சனிக்கிழமையான இன்று சென்ராய பெருமாள் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன.

சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த சென்ராய பெருமாளை பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் தரிசனம் செய்து வழிபட்டனர். கோவில் வளாகம் பக்தி மணம் கமழும் வகையில் விழாக்கோலம் பூண்டது.

# அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் தென்னங்கன்றுகள் விற்பனை

கிருஷ்ணகிரி, செப்.27-

கிருஷ்ணகிரி அடுத்த பி.ஜி.புதூர் அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் நெட்டை, குட்டை மற்றும் ஒட்டு ரக தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.



அரசம்பட்டி நெட்டை ரக கன்று ரூ.80-க்கும், நெட்டை குட்டை ஒட்டு ரக கன்றுகள் ரூ.200-க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

கன்றுகளை விவசாயிகள் நேரடியாக பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம்; மேலும் விவரங்களுக்கு 9600966970, 9566696864 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.



# அரசு மருத்துவமனைகளில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்

சின்னமனூர், செப்.27-

தேனி மாவட்டம் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் (Beti Bachao Beti Padha ) திட்டத்தின் கீழ், பெண் குழந்தைகளின் பிறப்பை மகிழ்ச்சியுடன்வரவேற்று கொண்டாடும் வகையில்

அரசு மருத்துவமனைகளில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணமான “Baby Play Gym”-யை வழங்கி, புதிதாக பிறந்த பெண் குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்தார். பெண் குழந்தைகளின் பிறப்பை ஊக்குவித்தல், பெண் குழந்தைகள் தொடர்பான சமூகத்தின் பார்வையில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பெண் குழந்தைகளின் பிறப்பை ஊக்குவிக்கும் வகையில் சின்னமனூர், உத்தமபாளையம் மற்றும் கம்பம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த 10 பெண்குழந்தைகளுக்கு குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணமான “Baby Play Gym” யை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

பெண்குழந்தைகளின் பிறப்பை குடும்பத்தினரும் சமூகத்தினரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்பதையும், குழந்தைகளின் ஆரம்பகால வளர்ச்சியில் விளையாட்டு மற்றும் தூண்டுதல் செயல்பாடுகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கும் வகையில் இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெண் குழந்தைகளுக்கு சமமான கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர்.சையது முகைதீன் இப்ராஹிம், மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணு பிரியா, முதன்மை மருத்துவ அலுவலர் மரு.மகேஸ்வரி, உத்தமபாளையம் வட்டாட்சியர்.பாலசண்முகம் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திரைப்படத்திற்காக பெற்ற 40 லட்சம் ரூபாய் முன் பணத்தை திருப்பி கொடுக்காத வழக்கில் நடிகர் ராஜ்கிரணுக்கு நிபந்தனை முன்ஜாமின் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, செப்.27-

திரைப்படத்துக்காக பெற்ற 40 லட்சம் ரூபாய் முன் பணத்தை திருப்பி கொடுக்காதது தொடர்பான வழக்கில், நடிகர் ராஜ்கிரணுக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.15 நாட்களுக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என நிபந்தனை முன்ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மீஞ்சூரில் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் நடத்தி வரும் சரவணன் என்பவர், கடந்த 2022 ஆம் ஆண்டு திரைப்படத்துக்காக நடிகர் ராஜ்கிரணுக்கு 50 லட்சம் ரூபாய் முன்பணம் அளித்துள்ளார். பட தயாரிப்புப் பணிகள் துவங்காததால், பணத்தை திருப்பிக் கொடுக்கும்படி, ராஜ்கிரணிடம், சரவணன் கேட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து, தயாரிப்பாளர் சங்கத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் 10 லட்சம் ரூபாயை 2025 ஆம் ஆண்டு சரவணனுக்கு திருப்பிக் கொடுத்த நிலையில், 40 லட்சம் ரூபாயை மோசடி செய்துவிட்டதாக, மீஞ்சூர் போலீசில் கடந்த 2025 செப்டம்பரில் ராஜ்கிரணுக்கு எதிராக சரவணன் புகார் அளித்தார்.

பொன்னேரி மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கடந்த ஆகஸ்ட் 28ம் தேதி ராஜ்கிரண் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முன் ஜாமீன் கோரி நடிகர் ராஜ்கிரண் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், படம் தயாரிப்பு தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் நடந்த நிலையில், 4 ஆண்டுகளுக்கு பிறகு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் உரிமையியல் வழக்கான இந்த வழக்குக்கு குற்றவியல் வழக்காக சாயம் பூசப்பட்டுள்ளது. தமிழக திரைப்பட ரசிகர்களுக்கு மிகவும் பரிச்சயமான நடிகரான தான், எங்கும் தப்பி ஓடி விட மாட்டேன் எனக் கூறியுள்ளார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ரமேஷ் ராஜ்கிரணுக்கு நிபந்தனையுடன் முன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளார். 15 நாட்களுக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என நிபந்தனை முன்ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

# மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 150 ஆசிரியர்களுக்கு தமிழக சட்டபேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் பெரி பெருமை விருதுகளை வழங்கி கவுரவித்தார்

மண்ணிவாக்கம், செப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் ’ஆசிரியர் தின விழா’வை சிறப்பிக்கும் வகையில் "பெரி பெருமை விருதுகள்" வழங்கும் விழா நிகழ்வு சீட்டா கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெரி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் மாண்பமைத்தலைவர் சரவணன் பெரியசாமி, தலைமைச் செயல்




அலுவலர் சசிவீரராஜன் ஆகியோர் தலைமைத் தாங்கினர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக தமிழக சட்டபேரவை தலைவர் ஜே.சி.டி.பிரபாகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அதனை தொடர்ந்து சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இருந்து தெர்ந்தெடுக்கப்பட்ட

நூற்று ஐம்பது அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரிகள், ஆசிரியர்களுக்கு பெரி பெருமை விருதுகளை சிறப்பு விருந்தினர் ஜே.சி.டி.பிரபாகர் வழங்கி கௌரவித்தார்.

இவ்விழா நிகழ்வில் பெரி கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், துறைத்தலைவர்கள், கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், நிர்வாக அலுவலர்கள் என அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பெரி கல்வி குழும தலைவர் சரவணன் பெரியசாமி கூறும்போது இரண்டாவது ஆண்டாக பெரி கல்வி குழுமம் இந்த ஆசிரியர்கள் பெரி பெருமை விருதினை வழங்கி வருகிறது. இந்த விருதுகள் இந்த கல்லூரி மாணவர்கள் மூலமகாவே சிறந்த ஆசிரியர்களை தெர்ந்தெடுத்து விருது வழங்குவது பெருமைக்குரியது என்றார்.

# சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பு - புதிய நிர்வாகிகள் தேர்வு

காளையார்கோவில், செப்.27-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 2026 - 2028 ஆம் கல்வியாண்டிற்கான பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பு மற்றும் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யும் நிகழ்ச்சி பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை தாங்கினார். பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார் அனைவரையும் வரவேற்புப் பேசினார். சிறப்புப் பார்வையாளராகக் காளையார்கோவில் வட்டார கல்வி அலுவலர் பொன்னி அவர்கள் கலந்து கொண்டு, பள்ளி மேலாண்மை குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, தலைமை ஆசிரியர் சுரேஷ் புதிய பொறுப்பாளர்களை எவ்வாறு தேர்வு செய்ய





வேண்டும் என்பது குறித்தும், அதற்கான நோக்கங்கள் குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கினார்.

முன்னாள் நிர்வாகிகளுக்கு கௌரவம்:

சிறப்பாகப் பணியாற்றிய முன்னாள் தலைவி டேவிட் அருள் ஷாலினி மற்றும் துணைத் தலைவி ஜெயா ஆகியோரைப் பாராட்டி, வட்டார கல்வி அலுவலர் பொன்னி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

புதிய நிர்வாகிகள் தேர்வு:

பின்னர், புதிய பள்ளி மேலாண்மை குழுவிற்கான நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இதில் தலைவராக ஆரோக்கிய ஜெலஸ்டினா, துணைத் தலைவராக மீனா ரீட்டா ராணி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர் செயலராக தலைமை ஆசிரியர் சுரேஷ் மற்றும் ஆசிரியர் பிரதிநிதியாக முத்துக்குமார் ஆகியோர் பொறுப்பேற்றனர்.

மேலும், பெற்றோர் உறுப்பினர்களாக ஜெஸ்டினா, செஸ்போனியா, சரஸ்வதி, சுகன்யா, முருகவள்ளி, அருள் ஜெஸ் பவுலா, சரண்யா, அருள் புனிதா, ஆரோக்கிய ஜூலி, அருள் ஜெனிஃபர், நித்தியா, டேவிட் அருள் ஷாலினி, ரகு, சத்தியம்மாள், லீமா ரோஸ், ஆரோக்கிய ரோசியா, நிகோமி கிறிஸ்டியா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் துணைத் தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

நிறைவு:

இந்நிகழ்ச்சியினை ஆசிரியை சகாய செல்வி சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். இதில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முருகன், தனபாக்கியம், பாரதி மலர், பெற்றோர்கள், கிராம பொதுமக்கள், முன்னாள் மாணவர்கள், முன்னாள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், காலைச் சிற்றுண்டி மற்றும் சத்துணவுப் பணியாளர்கள் எனப் பலரும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். முடிவில் பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார்.

# சிவகங்கை மாவட்டத்தில் ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டம் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் செப்.28 முதல் தொடக்கம்

சிவகங்கை, செப்.27-

சிவகங்கை மாவட்டத்தில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டம் வரும் 28.09.2026 அன்று தொடங்கப்பட உள்ளது.

காரைக்குடி அரசு மருத்துவமனை மற்றும் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய இரண்டு இடங்களில் இத்திட்டம் தொடங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 22.06.2026 முதல் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

காரைக்குடி மாநகராட்சி, சாக்கோட்டை, திருப்பத்தூர், கல்லல், தேவகோட்டை,



கண்ணங்குடி மற்றும் சிங்கம்புணரி ஆகிய வட்டாரங்களில் பிறந்த குழந்தைகளுக்கு காரைக்குடி அரசு மருத்துவமனையில் தங்க மோதிரம் வழங்கப்படும்.

புழுதிப்பட்டி, சிவகங்கை, மறவமங்கலம், பூவந்தி, திருப்புவனம் மற்றும் இளையான்குடி ஆகிய வட்டாரங்களில் பிறந்த குழந்தைகளுக்கு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தங்க மோதிரம் வழங்கப்படும். தினமும் 50 முதல் 100 குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற உள்ளது.

மேலும், 22.06.2026 முதல் 27.09.2026 வரை பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் அக்டோபர் 20-ஆம் தேதிக்குள் தங்க மோதிரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகுதியுடைய குழந்தைகளின் தாய்மார்களுக்கு சம்பந்தப்பட்ட வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அழைப்பிதழ் வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில், குறிப்பிடப்பட்டுள்ள காரைக்குடி அரசு மருத்துவமனை அல்லது சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று தங்க மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டத்தில் வழிகாட்டி மதிப்பு முரண்பாடு திருத்தம் பொதுமக்கள் கருத்து தெரிவிக்க 15 நாட்கள் அவகாசம்

கிருஷ்ணகிரி, செப்.27-

கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான வழிகாட்டி மதிப்பு முரண்பாடு திருத்தம் தொடர்பான வரைவு மதிப்புகள் பொதுமக்களின் கருத்து மற்றும் ஆட்சேபணைகளை அறியும் வகையில், வட்டாட்சியர் அலுவலகங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வழிகாட்டி மதிப்பு தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் அல்லது கருத்துரைகள் இருந்தால், அவற்றை பொதுமக்கள் 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மதிப்பீட்டு துணைக்குழுவிடம் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. தினேஷ் குமார், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

முரண்பாடுகளை களைய நடவடிக்கை

நடைமுறையில் உள்ள சந்தை மதிப்பு வழிகாட்டியில் 8 வகையான முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, அவற்றை களைவதற்கான அறிக்கை பதிவுத்துறை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.



இதன் தொடர்ச்சியாக, Tamil Nadu Stamp (Constitution of Valuation Committee for Estimation, Publication and Revision of Market Value Guidelines of Properties) Rules, 2010, விதி 6(3)-ன் கீழ், மதிப்பீட்டுக் குழுவின் கூட்டம் 15.07.2026 அன்று பதிவுத்துறைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரதப் பொருட்களை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கிராம வாரியான வழிகாட்டி மதிப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவது மற்றும் வழிகாட்டி மதிப்பு முரண்பாடுகள் தொடர்பான வரைவு வழிகாட்டி மதிப்புகளைப் பரிசீலித்து ஒப்புதல் அளிப்பது குறித்து, 18.09.2026 அன்று மாலை 4 மணியளவில் நடைபெற்ற துணை மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது இந்த வரைவு மதிப்புகள் பொதுமக்களின் பார்வைக்காக அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அவற்றை பார்வையிட்டு, தங்களது ஆட்சேபணைகள் மற்றும் கருத்துரைகளை உரிய காலக்கெடுவுக்குள் சமர்ப்பிக்கலாம்.

கருத்துகள் மற்றும் ஆட்சேபணைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மதிப்பீட்டு துணைக்குழு, கிருஷ்ணகிரி ஒழுங்கு முறை விற்பனை க்கூட வளாகம், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, செயின்ட்மேரி மருத்துவமனை அருகில், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் 635 001. (மின்னணு ஏல மையம், முதல் தளம்) பொதுமக்கள் 15 நாட்களுக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தங்களது கருத்துகள் மற்றும் ஆட்சேபணைகளை சமர்ப்பிக்கலாம்.



# முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பொம்மிகுப்பம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் சாதனை

ஜோலார்பேட்டை, செப்.27-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சிறு விளையாட்டு மைதானத்தில் 17/09/2026 அன்று முதல்வர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியில் 15 கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

இதில் பொம்மிகுப்பம் அரசு மேல்நிலை பள்ளி மாணவிகள் கபடி போட்டியில் கலந்து கொண்டு ரூ.36000/- பரிசு பெற்றுள்ளனர். திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன் IAS, ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் K.C.வீரமணி MLA, மாவட்ட விளையாட்டு அலுவலர் R.ஜெயகுமாரி, விளையாட்டு துணை பொது மேலாளர் நொயிலின் ஜான், முதல்வர் கோப்பை கல்லூரி ஒருங்கிணைப்பாளர் Dr. மகாலட்சுமி, ஆகியோர் பள்ளி மாணவிகளுக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

# தாம்பரத்தில் தமுமுக மமக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொதுக்குழுக் கூட்டத்தில் புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

தாம்பரம், செப்.27-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் (தமுமுக) மற்றும் மனிதநேய மக்கள் கட்சி (மமக) சார்பில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் தாம்பரத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் S.K.ஜாஹிர் உசேன் தலைமை வகித்தார். கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் மற்றும் பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டு மாவட்டத்தின் அமைப்பு சார்ந்த பணிகள் மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினர்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் எம். யாக்கூப், தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர் குணங்குடி அத்தா R.M. ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டு






சிறப்புரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் நிகழ்வில், மாவட்ட தேர்தல் அதிகாரியும் தலைமைப் பிரதிநிதியுமான A.K. சுல்தான் அமீர் கலந்து கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து, புதிய மாவட்ட நிர்வாகிகளைத் தேர்வு செய்தார்.

அதன்படி, புதிய மாவட்ட நிர்வாகிகளாக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவராக S.K. ஜாஹிர் உசேன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளராக OKN. அப்துல் காதர், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மாவட்ட செயலாளராக A. சௌகத் அலி, மாவட்ட பொருளாளராக எம். சபியுல்லா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் மற்றும் பல்வேறு அணிகளுக்கான நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டு, அவர்களிடம் மாவட்ட அமைப்பு சார்ந்த பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட அளவில் தமுமுக மற்றும் மமக அமைப்புப் பணிகளை மேலும் வலுப்படுத்துவது, பொதுமக்கள் மற்றும் சமூக மக்களுக்கான சேவைகளை தொடர்ந்து முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து நிர்வாகிகள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி செயலாளர் S. தமீம் அன்சாரி, மாநில செயற்குழு உறுப்பினர் S. ஜிந்தா மதார் SMI, தலைமைப் பிரதிநிதி Y. ஜெய்னுல் ஆபிதீன் உள்ளிட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாவட்ட நிர்வாகிகளுக்கு நிர்வாகிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். கூட்டம் கட்சி நிர்வாகிகள் பணிகளை ஒருங்கிணைத்து, செங்கல்பட்டு வடக்கு மாவட்டத்தில் தமுமுக மற்றும் மமக அமைப்பை தொடர்ந்து வலுப்படுத்தும் வகையில் நடைபெற்றது.

# தலைமை தேர்தல் ஆணையரை உடனடியாக கைது செய்து பணிநீக்கம் செய்ய வேண்டும் கர்நாடக முதல்வர் வலியுறுத்தல்

பெங்களூரு, செப்.27-

வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தப் பணி (SIR) தொடர்பான அரசியல் சர்ச்சை நீடித்து வரும் நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனடியாகக் கைது செய்து பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வலியுறுத்தி உள்ளார்.

பெங்களூருவின் ஃப்ரீடம் பார்க்கில் தேர்தல் ஆணையம் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக கர்நாடக காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இதன் போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் செயல்முறையை கேள்விக்குள்ளாக்கிய தலைமைத் தேர்தல் ஆணையர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு பணிநீக்கம் செய்யப்பட வேண்டும், மேலும் மறுசரிபார்ப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகி இருப்பதாகவும், தேர்தல் உரிமைகளைப் பாதுகாப்பு தக்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்றும் கோரினார்.

நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டிய ஜனநாயக நெறிமுறைகள் முற்றிலும் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டிய டி.கே.சிவகுமார், தார்மீக பொறுப்பேற்று தலைமைத் தேர்தல் ஆணையர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று மக்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் என அனைவரும் விரும்புவதாக குறிப்பிட்டார்.

# ஐநாவை பற்றி அக்கறை இல்லாதவர்கள் மறுசீரமைப்பை எதிர்க்கிறார்கள்: ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர் சாடல்

நியூயார்க், செப்.27-

ஐக்கிய நாடுகள் சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படாததால் சர்வதேச சமூகத்திடையே விரக்தி அதிகரித்து வருவதாக ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் நடைபெற்ற ஐநா பொதுச்சபைக் கூட்டத்தின் போது சிறப்பு நிகழ்ச்சியொன்றில் பேசிய அவர், சீர்திருத்தங்களை எதிர்ப்பவர்கள் ஐநா அமைப்பைத் தங்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்துகிறார்களே தவிர, அந்த அமைப்பின் மீது அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்று கடுமையாகச் சாடினார்.

மேலும் பேசிய அவர், வெறும் பேச்சளவில் இல்லாமல் வரைவு அறிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, ஜனநாயக முறைப்படி வாக்கெடுப்பு நடத்தி ஐநா சீர்திருத்தங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும் என்றார்.

1945-இல் உருவாக்கப்பட்ட 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐநா பாதுகாப்பு கவுன்சில், தற்போதைய 21-ஆம் நூற்றாண்டின் நவீன உலகச் சூழலுக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும் என்றும், அதில் நிரந்தர உறுப்பினராகத் தங்களுக்கு இடம் கிடைக்க வேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161